**MCOP NO: 3569/2024** **DATE: 07.04.2026**

ம.சா : 1

பெயர் : திரு.ஆனந்த்பாபு

த/பெ : திரு.பென்சலையாஹ

வயது : 37

**மசா1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இன்று நீதிமன்றத்திற்கு சாதாரண மிதியடிகள் அணிந்து தான் வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் விபத்தில் சம்பந்தப்பட்ட 2 வாகனங்களுக்கு உண்டான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ செலவுகளை காட்டுவதற்காக மசாஆ 4 ஐ தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், வேறு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்டும் மசாஆ 4 ன் முதல் தாளில் மீத தொகை ரூ.10,000/– செலுத்தியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நான் மருத்துவ செலவு செய்ததாக ரூ. 95,884/– ற்கு மட்டும் தான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மசாஆ 5 ஆன எதிர்கால மருத்துவ செலவு ஆவணமானது அதிக இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு காலில் பொருத்தப்பட்ட Screw ஆனது சேதம் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு screw பொருத்தியதால் அதிக வலி இருப்பதால் அது பொருத்து மருத்துவரை அணுகி கேட்ட போது அதை அகற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதன் அடிப்படையில் தான் மசாஆ 5 ஐ தாக்கல் செய்துள்ளேன். முதலில் எனக்கு பொருத்தப்பட்ட screw அகற்றிவிட்டு அதற்கு உண்டான செலவு தொகையை பின்னிட்டு தான் இழப்பீடாக கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ளது போல் என் காலில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்வதற்கு ரூ.5,00,000/– செலவாகும் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் மருத்துவ செலவுகளை அதிகப்படுத்தி காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வருமானம் மற்றும் வருமான இழப்பு குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரமாண பத்திரிக்கை பத்தி 7 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பளம் எவ்வளவு பெற்று வருகிறேன் என்பதை காட்டுவதற்கு வங்கி கணக்கு பட்டியலை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது உள்ள தவறை மறைப்பதற்காக தான் உரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.